# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 352/2019

சாட்சி : PW1

பெயர் : சீனிவாசன் தேதி: 10-12-2024

**7 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

என்னுடைய தாத்தா பெயர் பழனிசாமி. என்னுடைய தாத்தாவின் அண்ணன் பெயர் தங்கமுத்து கவுண்டர். என்னுடைய தாத்தாவின் அப்பா காளியண்ணன் கவுண்டர் இறந்தபிறகு எனது தாத்தா பழனிசாமியும், தங்கமுத்துவும் சொத்துக்களை இரண்டாக பிரித்துக்கொண்டார்கள் என்றால் ஆமாம். தாவா சொத்து என் தாத்தா பழனிசாமிக்கு பிரிந்தது என்றால் ஆமாம். என் தாத்தா பெயரில் பட்டாவும் ஏற்பட்டது என்றால் ஆமாம். என்னுடைய தாயார் நான் மற்றும் என் சகோதரிகள் ஒரு பாகபாத்திய விடுதலை பத்திரம் 29.05.2007 வா.த.சா.ஆ-A13 எழுதிக்கொடுத்தோம் என்று சொன்னால் தாத்தாவுடைய சொத்தை பொறுத்து காட்டுவேப்பிலைபட்டி கிராமத்தில் உள்ள சொத்துக்களை பொறுத்து எழுதிக்கொடுத்தோம். அந்த விடுதலைப்பத்திரத்தில் தாவா சொத்திற்கு எங்களுக்கு உரிமையுள்ளதாக கண்டு எழுதப்படவில்லை என்றால் ஆமாம். அசல் வழக்கு எண். 144/2002 கூடுதல் விரைவு நீதிமன்றம் சேலத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கை திரும்பப்பெற்றுக்கொண்ட சமயத்தில் நானும், என் சகோதரிகளும் மேஜர் என்றால் ஆமாம். வா.த.சா.ஆ- A13 விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்த சமயத்தில் எனக்கும், என் சகோதரிகளுக்கும் தலா ரூ. 10,00,000/- கொடுத்தார்கள் என்றால் ஆமாம். என்னுடைய தாத்தா அவருடைய காலத்தில் தாவா சொத்தை 7 ம் பிரதிவாதி 12.04.2007 ல் வா.த.சா.ஆ-A11 மூலம் விற்பனை செய்துவிட்டார் என்றால்

எனக்கு தெரியாது. அதன் பின்னிட்டு 7ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கான பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தா பழனிசாமியும், அவருடைய சகோதரர் தங்கமுத்துவும் பாகம் பிரித்துக்கொண்டு தாவா சொத்து தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்டதால், அது என் தாத்தாவின் தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தாவும், அவருடைய சகோதரர் தங்கமுத்துவும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று நான் வழக்குரை மற்றும் முதல் விசாரணை பிரமாண பத்திரத்திலும் கூறியுள்ளேன் என்று சொன்னால் ஆமாம். அவர்கள் சொத்தை பிரித்துக்கொண்டார்கள். எனவே என் தாத்தா பழனிசாமிக்கு தாவா சொத்தை விற்பதற்கு முழு உரிமையும் உள்ளது என்றும், அதனடிப்படையில் தாவா சொத்தை 7ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. என் தாத்தாவின் தனிப்பட்ட சொத்து தாவா சொத்து என்பதால் தாவா சொத்தை பொறுத்து என்னிடம் விடுதலை பத்திரம் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. காட்டுவேப்பிலைபட்டியில் உள்ள பூர்வீக சொத்தை பொறுத்து விடுதலை பத்திரம் எழுதி வாங்கியுள்ளார்கள் என்று சொன்னால் ஆமாம். 7ம் பிரதிவாதி தாவா சொத்தில் பட்டா பெயர் மாற்றி, அனுபவ சுவாதினத்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவா சொத்தில் எனக்கு பாகம் கோர உரிமையில்லை என்றும், தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.